(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 10 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, யூலை 22, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0025/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 15 வருடங்களுக்கான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையையும்,

(ii) வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட நேரத்தில் வரவு செலவுத்திட்டத்துக் கெதிராக நிலவிய பற்றாக்குறையையும்,

(iii) கடந்த 15 வருடங்களுக்கான மொத்த வரவு செலவுத்திட்டத்தை உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளிலிருந்து பெற்ற மொத்த கடன்களுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) குறித்த வருடங்களில் வரவுசெலவுத்திட்டத்திற்கெதிராக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கான காரணத்தை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0027/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் கொத்மலைத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும் எப்போது பூர்த்திய டையும் என்பதையும்,

(ii) கருத்திட்டத்தின் ஆரம்பச் செலவையும் இன்றுள்ளவாறான செலவையும் வெவ்வேறாகவும்,

(iii) பணம் வழங்கவுள்ள நாடு அல்லது நிறுவனத்தையும்,

(iv) பணம் வழங்குவதற்கான நிபந்தனைகளையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) பெறுமானத்தேய்வு அடங்கலாக அலகொன்றுக்கான செலவை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0028/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியம், பெற்றோலியவள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆம் திகதி முதல் இற்றைவரை பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், உலை எண்ணெய், விமான எரிபொருள் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்ட திகதிகளையும்,

(ii) பெற்றோலுக்கான சேர் பெறுமதி நூற்றுவீதத்தையும்,

(iii) லீற்றர் ஒன்றுக்கு மேற்குறிப்பிட்ட பெறுமதியையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு பெற்றோலிய உற்பத்திக்குமான 2006 ஆம் ஆண்டுக்கான மொத்த வரிகளையும்,

(ii) இவ்வருமானம் பயன்படுத்தப்பட்ட நோக்கத்தையும்,

(iii) எல்லா வரிகளும் நீக்கப்படுமாயின் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், உலை எண்ணெய், விமான எரிபொருள் ஆகியவற்றின் விலை என்னவாக இருக்கும் என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) வரிகளின் அதிகரிப்பு வீதிகளை மேம்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டது என்பதையும்,

(ii) வரிகள் விதிக்கப்பட்டதன் பின்னர் வீதிகள் மோசமடைந்துள்ளன என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறெனின், அத்தகைய வரிகளின் நோக்கம் என்ன?

(உ) இன்றேல், ஏன்?

0337/ '08

4.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு அரசுக்குச் சொந்தமான கட்டிடமொன்றில் தாபிக்கப்பட்டுள்ளதா இன்றேல் தனிப்பட்ட உரிமையாளரொருவருக்குச் சொந்தமான கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) தனிப்பட்ட உரிமையாளரொருவருக்குச் சொந்தமான கட்டிடமாக இருக்கும் பட்சத்தில் அதன் உரிமையாளரின் பெயர் யாதென்பதையும்,

(iii) அக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(ஆ) (i) உரிய அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(ii) இந் நிறுவனங்கள் எவ்விடங்களில் அமைந்துள்ளன என்பதையும்,

(iii) இந் நிறுவனங்கள் அமைந்துள்ள கட்டிடங்கள் அரசுக்குச் சொந்தமான வையா இன்றேல் தனிப்பட்ட உரிமையாளர்களுக்குச் சொந்தமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தனிப்பட்ட உரிமையாளர்களது கட்டிடங்களில் பேணப்பட்டு வருகின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) அக்கட்டிடங்களின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்,

(iii) உரிய கட்டிடங்களின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0338/ '08

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கலாச்சார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாச்சார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சு அரசுக்குச் சொந்தமான கட்டிடமொன்றில் தாபிக்கப்பட்டுள்ளதா இன்றேல் தனிப்பட்ட உரிமையாளரொருவருக்குச் சொந்தமான கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) தனிப்பட்ட உரிமையாளரொருவருக்குச் சொந்தமான கட்டிடமாக இருக்கும் பட்சத்தில் அதன் உரிமையாளரின் பெயர் யாதென்பதையும்,

(iii) அக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை எவ்வளவு என்பதை யும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(ஆ) (i) உரிய அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(ii) இந் நிறுவனங்கள் எவ்விடங்களில் அமைந்துள்ளன என்பதையும்,

(iii) இந் நிறுவனங்கள் அமைந்துள்ள கட்டிடங்கள் அரசுக்குச் சொந்தமான வையா இன்றேல் தனிப்பட்ட உரிமையாளர்களுக்குச் சொந்தமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தனிப்பட்ட உரிமையாளர்களது கட்டிடங்களில் பேணப்பட்டு வருகின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) அக்கட்டிடங்களின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்,

(iii) உரிய கட்டிடங்களின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0339/ '08

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கிராமியக் கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீண்டகால பாரம்பரிய வரலாற்றைக் கொண்டுள்ள உள்ளூர் பித்தளைக் கைத்தொழில் தெனுவர பிரதேச வாசிகளின் பிரதான சீவனோபாயமாகும் என்பதையும்,

(ii) இக் கைத்தொழிலில் மூன்று (3) இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பயன் பெறுகின்றனரென்பதையும்,

(iii) தற்பொழுது இக்கைத்தொழிலுக்குத் துர்பாக்கியமான நிலை ஏற்பட்டுள்ள தென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இக்கைத்தொழிலுக்கு முக்கியமாகப் பயன்படுத்தப்படுகின்ற செம்பு, பித்தளை, துத்தநாகம், அலுமினியம், ஆகியவற்றைத் துண்டுகளாக்கி அதிக விலைக்கு இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதன் காரணமாக உள்ளூர் பித்தளை கைத்தொழி லுக்கு இம் மூலப்பொருட்களின் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இம்மூலப்பொருட்களைத் துண்டுகளாக்கி இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதை உடனே நிறுத்தி உள்ளூர் பித்தளைக் கைத்தொழிலைப் பாதுகாக்க அவர் உரிய நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0393/ '08

7.

கௌரவ அசல ஜாகொடகே,— நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட் டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0394/ '08

8.

கௌரவ அசல ஜாகொடகே,— அனர்த்த முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0395/ '08

9.

கௌரவ அசல ஜாகொடகே,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0442/ '08

10.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சர் கடற்றொழில் அமைச்சின் வாகனங்களைப் பயன்படுத்துகின்றாரா என்பதையும்,

(ii) அவ்வாறெனின் அதன் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) கடந்த எட்டு மாதங்களுக்குள் எரிபொருளுக்காக செலவிடப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0443/ '08

11.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காலி கடேவெல்ல என்ற பெயரில் மீன்பிடி படகுத்துறையொன்று இருக்கின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்த மீன்பிடி படகுத்துறைக்கு இடையூறு ஏற்படக்கூடிய வகையில் மண் நிரப்புவது யார்,

(ii) சம்பந்தப்பட்ட மண் நிரப்பு வேலைகளுக்கு கரையோர பாதுகாப்பு திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதா,

(iii) ஆமெனில், சம்பந்தப்பட்ட அனுமதி வழங்கப்பட்ட திகதி யாது மற்றும் எந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) மேற்படி மண் நிரைப்பல் மற்றும் நிர்மாணப்பணிகள் காரணமாக, கடற்றொழிலாளர்களுக்குத் தமது தொழிலைச் செய்ய முடியாமலுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) அவ்வாரெனில், கடற்றொழிலாளர்கள் தமது தொழிலைச் செய்யக் கூடிய வகையில் மேற்படி மண் நிரப்பல் மற்றும் நிர்மாணப் பணிகளை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா,

(ii) அது எந்தக் காலப்பகுதியில்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0444/ '08

12.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 10 ஆண்டுகளில் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் படகுத்துறைகள் அமைப்பதற்காக நாட்டப்பட்ட அடிக்கற்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவை எந்த இடங்களில் நாட்டப்பட்டன,

(iii) இதுவரை அமைக்கப்பட்ட துறைமுகங்கள் மற்றும் படகுத்துறைகளின் எண்ணிக்கை எவ்வளவு, சம்பந்தப்பட்ட இடங்கள் யாவை,

(iv) இந்தத் துறைமுகங்கள் மற்றும் படகுத்துறைகளின் நிர்மாணப்பணிகள் எப்பொழுது முடிவடைந்தன,

(v) நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0488/ '08

13.

கௌரவ விஜித ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் (RADA) எப்போது ஆரம்பிக்கப்பட்டது.

(ii) அது எந்தச் சட்ட அடிப்படையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தின் தலைவர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்கள் உட்பட மொத்தப் பணியாளர்களது எண்ணிக்கை எவ்வளவு,

(ii) இவர்களது பதவிகள், கல்வித் தகைமைகள், படிகள், கொடுப்பனவுகள் மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட அடிப்படை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நிறுவனத்தின் மூலம் பயன்பாட்டின் பொருட்டு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது,

(ii) குறித்த பிரதான உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ள விதம், வாகனத்தின் வகை மற்றும் இலக்கம் யாது,

(iii) அத்தகைய வாகனங்களுக்கான வாடகை, ஒப்பந்த அல்லது வேறு ஏதேனுமொரு விதத்தில் பெறப்பட்டுள்ளதெனில் அவை பெறப்பட்ட அடிப்படை, அத்தகைய ஒவ்வொரு வாகனத்திற்காகவும் செலவு செய்யப்பட்ட தொகை தனித்தனியாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0489/ '08

14.

கௌரவ விஜித ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் (RADA) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு,

(ii) அத்தகைய பணத்தொகை திறைசேரியினால் மாத்திரமா ஒதுக்கப்பட்டது,

(iii) வேறு ஏதேனுமொரு நிறுவனத்தின் மூலம் பணம் பெறப்பட்டுள்ளதெனில் அது எந்த நிறுவனத்திலிருந்து

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்திற்கு (RADA) அரச பணத்தை ஒதுக்குவதற்கு அங்கீகாரம் வழங்கிய உத்தியோகத்தர்களது பெயர் மற்றும் பதவிகள் தனித்தனியாக யாது,

(ii) அரச பணத்தை மேற்படி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு பொதுத் திறைசேரிக்கு அல்லது வேறேதேனும் அரச நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பின் அது யாரால்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி சட்ட ரீதியாக அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆவணங்களை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0490/ '08

15.

கௌரவ விஜித ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி முகவர் (RADA) நிறுவனத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் அமுலாக்கப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களில் ஆலோசகர்களை அல்லது ஆலோசனை சேவைகள் நிறுவனத்தை தெரிவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்பட் டனவாவென்பதையும்,

(ii) மேற்படி விலைமனுக்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள், பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விலைமனுக்கள் யாவை யென்பதையும்,

(iii) மேற்படி விலைமனுக்கான அங்கீகரித்த சபை உறுப்பினர்களின் பெயர், பதவி மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iv) இவற்றுக்கிடையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(v) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களை புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்துடன் (RADA) இணைப்பாக்கம் செய்தவர்கள் யாரென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஆலோசனை சேவைகளுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு மாவட்டம் மற்றும் கருத்திட்ட வாரியாக தனித்தனியாக எவ்வள வென்பதையும்,

(ii) மேற்படி செலவினங்களுடன் தொடர்புடைய கட்டுமானங்களை மேற் பார்வை செய்த மற்றும் கொடுப்பனவுகளை அங்கீகரித்த உத்தியோகத்தர் களின் பெயர், பதவி மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி ஆலோசனை சேவைகள் நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன் படிக்கைகள் ஒவ்வொரு மாவட்டம் மற்றும் கருத்திட்ட வாரியாக தனித்தனியாக யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபை,— நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபையொன்றைத் தாபிப்பதற்கும் அது தொடர்பான தேசியக் கொள்கையை வகுத்தமைப்பதற்கும் அத்தகைய கொள்கையின் செயற்படுத்துகையை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; நிலைபெறுதகு நகரக்குடியமர்த்தல் அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கென, கிடைக்கக் கூடிய வீடமைப்பு அலகுகளைத் தரமுயர்த்துவதன்மூலம் அல்லது கூடுதல் சிறந்தனவாகவுள்ள வீடமைப்பு வசதிகளையும் ஆகக்குறைந்த நகரச்சேவைகளுக்கான அணுகுகையையும் வழங்குவதன் மூலம் குறைவாகச் சேவையாற்றப்பட்ட நகரக் குடியமர்த்தல்களில் வாழ்கின்ற ஆட்களின் வாழ்கை நிலைமைகளைச் சீராக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 3.30 மணிக்கு 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் பந்தி தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 112, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இரண்டாயிரத்து என்னூற்று எண்பது மில்லியன் ஒரு இலட்சத்து எண்பதாயிரத்துமுன்னூற்றி முப்பத்தி இரண்டு (ரூபா 2,880,180,332) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | ரூபா |
|---|---|---|
| தலைப்பு 112 — | வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | மீண்டுவரும் செலவினம் | 401,881,272 |
| | மூலதனச் செலவினம் | 2,478,299,060 |
| | மொத்தம் | 2,880,180,332 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, யூலை மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 2 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 318,000,000.

*2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— காவற்றூதுப் பணிகள் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, காவற்றூதுப் பணிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் காவற்றூதுப் பணிகளுக்கான அறவீடு தொடர்பில் ஆக்கப்பட்டு 2007 யூன் மாதம் 11 ஆந் திகதிய 1501/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

பிரதம அமைச்சரும், உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறிவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்பு ரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 09 ஆம் திகதிய 1531/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2008.03.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக் கப்படுமாக.

*4.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான “2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை (தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்” அங்கீகரிக்கப்படுமாக.

*5.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— விலங்கின, தாவர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) விலங்கின, தாவர பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ) ஆம் பந்தியினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு சுற்றாடல்,

இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதிய 1547/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*6.

கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 142, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டு மில்லியன் (ரூபா 18,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| | | ரூபா |
| தலைப்பு 142 — | கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 | — சமூக கலாசாரம் இணைந்து செயற்படல் | |
| | மீண்டுவரும் செலவினம் | 18,000,000 |
| | மொத்தம் | 18,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, யூலை மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 3 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 3,198,180,332.

*7.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

பாடசாலை ஆசிரியர் ஓய்வூதிய(திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்,— இரண்டாம் மதிப்பீடு

*11.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*13.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*22.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம்

இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*23.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேர ணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணை யினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்படவேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும்,

படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , தேசிய பொலிசு ஆணைக்குழுவின், தவிளாசருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் சம்பளங்களும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் சம்பளங்களும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும், படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— இலங்கை அரச பொறி யியல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை - 2004,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின 14(3) ஆம் பிரிவின் கீழ், 2006.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை, ஐந்தொகை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வீடமைப்பு, நிர்மாணத்துறை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

*31.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2005,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் கீழ், 2006.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

32.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

றங்கா கலை நிறுவனத்தைக் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொளண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.